**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**அசல் வழக்கு எண்.41/2023**

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01 ஆம் நாள் புதன் கிழமை

வா.சா.3 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு.த.பாரதி, Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | பாலசுப்பிரமணியன் | த/பெ.: | இராமநாதன் |
| கிராமம்: | உதயமார்த்தாண்டபுரம் | தாலுக்கா: | முத்துப்பேட்டை |
| மதம்: | இந்து | தொழில்: | விவசாயம் |
| வயது: | 62 | முகவரி: | உதயமார்த்தாண்டபுரம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 01.04.2026.

**<u>முதல் விசாரணை :–</u>**

நான் அசல் வழக்கில் வாதி தரப்பு சாட்சி ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

நான் நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்கிறேனா என்றால் வாதியின் அதிகார முகவர் விவேகானந்தன் அழைத்ததின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். அசல் வழக்கை யார் தாக்கல் செய்துள்ளார் என்றால் விவேகானந்தன் தான் தாக்கல் செய்துள்ளார். நான் சொல்வது போல் விவேகானந்தன் என்பவர் அசல் வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றும், மாலதி தான் தாக்கல் செய்துள்ளார் என்றும், தற்போது தான் மாலதியின் அதிகார முகவராக விவேகானந்தனை சேர்த்துள்ளார் என்று

சொன்னால் சரிதான். மாலதி, விவேகானந்தன் ஆகியோர்கள் எனக்கு உறவினர்கள் என்றால் சரிதான். தாவா சொத்தின் புல எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து யாருக்கு சொந்தமானது என்றால் மாலதிக்கு சொந்தமானது. மாலதிக்கு தாவா சொத்து எப்படி கிடைத்தது என்றால் மாலதியின் கணவர் இராமமூர்த்தி என்பவர் ஆர்.கே.பி.நடராஜனின் மனைவி என்பவரிடமிருந்து கிரயம் வாங்கினார். மாலதியின் கணவர் கிரயம் வாங்கிய கிரய ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து அரசுக்கு சொந்தமான சொத்துகள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து அரசுக்கு சொந்தமான நீர்நிலை, புறம்போக்கு சொத்துக்கள் என்றும், தாவா சொத்திற்கும், வாதிக்கும் எவ்வித உரிமையும் கிடையாது என்றும், தாவா சொத்தின் உண்மை தன்மையை தெரியாமல் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து அரசுக்கு சொந்தமான சொத்து என்றும், அரசுக்கு சொந்தமான சொத்தை தனிப்பட்ட நபர்கள் யாரும் கிரயம் வாங்கவோ, விற்கவோ முடியாது என்றும், நான் வாதிக்கு ஆதரவாக வாதியின் கணவர் கிரயம் பெற்றதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா கிராமத்தில் அரசுக்கு சொந்தமான நீர்நிலை வகைபாடு உடைய இடம் மற்றும் பஞ்சாயத்திற்கு சொந்தமான இடம் ஆகியவற்றில் பல்வேறு நபர்கள் தாவா கிராமத்தில் உள்ள சொத்துக்களை ஆக்கிரமிப்பு செய்திருந்ததாக கூறி அந்த

ஆக்கிரமிப்பு கட்டிடங்களை அகற்றிவிட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 10–ற்கும் மேற்பட்ட கடை, கட்டிடங்களை ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அகற்றினார்கள் என்றும், தாவா சொத்தில் உள்ள வாதிக்கு சொந்தமான கட்டிடத்ததை வேண்டுமென்றே அகற்றினார்கள் என்றும், மற்ற நபர்களுக்கு சொந்தமான ஆக்கிரமிப்பு உள்ள பகுதிகளை அகற்றினார்கள் என பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா கிராமத்தில் உள்ள பல்வேறு நபர்கள் அரசுக்கு சொந்தமான இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாகவும், அதை அகற்றி கொடுக்கும்படியும் புகார் மற்றும் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்து அதன் அடிப்படையில் தாவா கிராமத்தில் உள்ள அரசுக்கு சொந்தமான நீர்நிலை புறம்போக்கில் உள்ள 50–க்கும் மேற்பட்ட கடை மற்றும் கட்டிடங்களை அகற்றினார்கள் என்று சொன்னால் சரியல்ல. அரசுக்கு சொந்தமான தாவா கிராமத்தில் உள்ள நீர்நிலை புறம்போக்கில் உள்ள பகுதிகளை சரியாக அளவீடு செய்து, உரிய அறிவிப்பும், கால அவகாசம் வழங்கியும் ஆக்கிரமிப்புகளை சட்டத்திற்கு உட்பட்டு அகற்றப்பட்டது என்றும், நான் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா கிராமத்தில் அரசுக்கு சொந்தமான ஆக்கிரமிப்பு பகுதிகளை மற்ற நபர்களுக்கு அறிவிப்பு கொடுத்தது போல் வாதிக்கும் முறையாக அறிவிப்பு கொடுத்து ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை பற்றி

எனக்கு முழு விவரமும் தெரியாது என்றும், வாதி கேட்டுக்கொண்டதின்படி வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை:–**</u> இல்லை.

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.